உள்ளாட்சித் தினத்தை முன்னிட்டு திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட சோராஞ்சேரி ஊராட்சியில் கிராம சபை கூட்டம் நடைபெற்றது கிராம சபையில் சிறுபான்மையினர் நலன் மற்றும் அயல்நாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பல்வேறு ஆலோசனை வழங்கி பொதுமக்களிடம் கோரிக்கைகளை கேட்டறிந்து மனுக்களை பெற்றுக் கொண்டார் உடன் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, மாவட்ட ஆட்சித்தலைவர் பிரபு சங்கர், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, ஒன்றிய செயலாளர் ப.ச.கமலேஷ், ஆவடி துணை ஆணையர் ஐமன் ஜமால், திட்ட இயக்குனர் வை. ஜெயக்குமார் , ஒன்றிய குழு துணை தலைவர் பரமேஸ்வரி கந்தன், ஊராட்சி மன்ற தலைவர் சுகுமார், உதவி இயக்குனர் பரணி, பி.டி.ஒ. வெங்கடேஷ், ஊராட்சி மன்ற துணைத் தலைவர் பாபு , நிர்வாகிகள் வி.குமார், ஏ.ஜனார்த்தன், எம்.இளையான், ஏ.ஆர்.பாஸ்கர், வயலை பிரபாகரன், வி.பி.பிரகாஷ், வி.தணிகாசலம், த.குமரேசன், பேட்டை திருமலைராஜ், கேசவன், அக்னி ம.செ.ராஜேஷ், பிரியாசெல்வம், பரிமலேழகன், நும்பால் ஆசைதம்பி, உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் உட்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்..

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் தெற்கு பகுதி 30 வட்ட பொருளாளர் கஜேந்திரன் இல்ல திருமணத்தில் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் மாதவரம் சுதர்சனம் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன் புழல் பரந்தாமன், இ. மோகன், வட்டக் கழக செயலாளர் டி. சுந்தரம், மாவட்ட பிரதிநிதி மோகனசுந்தரம், ஆர். தனசேகர், ஜி. பார்த்தசாரதி, டி. குருமூர்த்தி, வீ. டி. மூர்த்தி, எஸ். முத்து, ஆர். கண்ணன், எஸ். பூபதி, சுந்தரபாபு, சுசிலா, தியாகராஜன், ஏ.வி .முருகன், சி. எஸ் .எஸ்.டி. சீனிவாசன், சந்தோஷ், மாமன்ற உறுப்பினர் கார்த்திக் திருநாவுக்கரசு.துறைமுகம் பெருமாள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்

திரு.வி.க.நகர் தொகுதியில்

வாக்காளர் திருத்தம் - சேர்ப்பு சிறப்பு முகாம்!

ப.தாயகம்கவி,எம்.எல்.ஏ., பார்வையிட்டார்!

சென்னை.நவ.26-

முதலமைச்சர். துணை முதலமைச்சர் ஆகியோரின் அறிவுறுத்தலின்படியும் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆலோசனைப்படியும் கழக துணை அமைப்பு செயலாளர், திரு.வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ப.தாயகம்கவி. திரு.வி.க.நகர் சட்டமன்ற தொகுதியில். வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல். நீக்கல் மற்றும் திருத்தம் செய்யும் பணிகளுக்காக 24/11/ 2024 .71, 71(அ).72.72(அ).74.74 (அ). 73.73(அ).75.75(அ).76.76(அ) ஆகிய வார்டுகளில் நடைபெற்ற வாக்காளர் சிறப்பு முகாமினை பார்வையிட்டார்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி. 1.1.2025ம் தேதியை தகுதி ஏற்படுத்தும் நாளாகக்கொண்டு வாக்காளர் பட்டியலில் திருத்தம் மேற்கொள்ளும் வகையில் சென்னை மாவட்டத்தில் உள்ள 16 சட்டமன்ற தொகுதிகளுக்கான வரைவு வாக்காளர் பட்டியல் 29.10.2024 அன்று வெளியிடப்பட்டது.

இந்த வரைவு வாக்காளர் பட்டியல் சென்னை மாநகராட்சி மண்டல அலுவலகங்கள் 4. 5. 6. 8. 9. 10. 13 மற்றும் அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் தங்களது பெயர் மற்றும் குடும்பத்தினர் பெயர் விவரங்கள் வரைவு வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ளனவா? என்பதை சரிபார்த்து கொள்ளும் வகையில்

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல். நீக்குதல். முகவரி மாற்றம் செய்தல் போன்றவற்றை வாக்காளர்கள் மேற் கொள்வதற்கு வசதியாக

சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை ஆகிய தேதிகளில் சென்னை மாவட்டத்திற்கு உட்பட்ட 947 வாக்குச்சாவடி மையங்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டன.

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படாமல் உள்ளவர்கள் மற்றும் 1.1.2025 அன்று 18 வயது பூர்த்தி அடை பவர்கள் (1.1.2007ந் தேதிக்கு முன்பாக பிறந்தவர்கள் மற்றும் 17 வயது நிரம்பி 18 வயது பூர்த்தி அடையும் நிலையில் உள்ளவர்களும்) படிவம்6 மூலம் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்துக்கொள்ளலாம். பெயர் நீக்கம் மற்றும் சட்டமன்ற தொகுதிக்குள்ளேயே ஒரு இடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு குடிபெயர்ந்து புதிய வசிப்பிடத்தில் உள்ளவர்கள். மேலும் வேறு தொகுதிக்கு குடிபெயர்ந்தவர்கள் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க மற்றும் திருத்தங்கள் செய்ய உரியபடிவத்தை பூர்த்தி செய்து அதற்கான ஆதாரத்தை இணைத்து அளிக்க வேண்டும். இணையதளம் மூலம் விண்ணப்பிக்நடைபெற்ற சிறப்பு முகாமினை.

கழக துணை அமைப்பு செயலாளர். திரு.வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ப.தாயகம்கவி. திரு.வி.க.நகர் சட்டமன்ற தொகுதியில் .71,71(அ). 72.72(அ). 74.74(அ). 73. 73(அ).75.75(அ).76.76 (அ)ஆகிய வார்டுகளில் நடைபெற்ற சிறப்பு முகாமினை பார்வையிட்டார்.மேலும் அந்தந்த பாகங்களில் களப்பணியில் இருந்த கழக நிர்வாகிகளையும் பாக முகவர்களையும் சந்தித்து கள் நிலவரம் குறித்து கேட்டறிந்தார்.

இந்த சிறப்பு முகாமில் திரு.வி.க நகர் தலைமை கழக தேர்தல் பொறுப்பாளர் தண்டலம் கிருஷ்ண மூர்த்தி வடக்கு பகுதி செயலாளர் செ.தமிழ்வேந்தன் .தெற்கு பகுதி செயலாளர் எம்.சாமிக்கண்ணு. வட்ட செயலாளர்கள் பரிமளாசுரேஷ். ம.ருத்ரமூர்த்தி. எம்.ஏ.டீக்கா. எம். இசட். அபாய். வழக்கறிஞர் கிருஷ்ணகுமார். எஸ்.புஷ்பராஜ். தமீம்பாய்.பொல்லு சுரேஷ். வி. கே.வெங்கடேசன். எஸ்.சசிகுமார்.எஸ்.வெங்கடேசன் மற்றும் கழக நிர்வாகிகள் .பாகமுகவர்கள் பங்கேற்றனர்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள்:

மீஞ்சூர் கிழக்கு ஒன்றியம் முழுவதும் நலத்திட்ட உதவிகள்!

ஒன்றியக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்!

திருவள்ளூர், நவ. 26

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் மீஞ்சூர் கிழக்கு ஒன்றியம் தி.மு.க. சார்பில் வல்லூர் ஊராட்சியில் தி.மு.க. அலுவலகத்தில் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளர் டி.ஜே. கோவிந்தராஜன் ஆலோசனைப்படி மீஞ்சூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இதில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 27ஆம் தேதி அன்று பிறந்தநாளை முன்னிட்டு திருவள்ளூர் மீஞ்சூர் கிழக்கு ஒன்றியத்தில் உள்ள ஊராட்சிகளில் ஏழை எளிய மற்றும் பள்ளி மாணவ-மாணவிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

இதில் 27.11.2024 அன்று வடசென்னை அனல் மின் நிலையம் நுழைவாயில் பகுதியில் ஆர்.ராமமூர்த்தி ஏற்பாட்டில் அத்திப்பட்டு ஊராட்சியில் எம்.டி.ஜி. கதிர்வேல் ஏற்பாட்டில் தடம் பெரும்பாக்கம் பகுதியில் கே.ஜி.பாஸ்கர் சுந்தரம் ஏ.ராஜா ஆகியோர் ஏற்பாட்டில், நெய்த வாயல் ஊராட்சியில் ஸ்ரீதர், வீரன் ஆகியோர் ஏற்பாட்டில் வாயலூர் ஊராட்சியில் தசரதன் தாஸ் கோபி ஆகியோர் ஏற்பாட்டில் 28.11.2024 வெள்ளி வாயல்ச்சாவடி ஊராட்சியில் மோகனசுந்தர், யுவராஜ், தமிழரசன் ஆகியோர் ஏற்பாட்டில் கொண்டாங்கரை ஊராட்சியில் கலைவாணன் தினகரன், புகழேந்தி ஏற்பாட்டில், எஸ்.ஆர்.பாளையம் ஊராட்சியில் இ.மூர்த்தி கோவிந்தசாமி ஆகியோர் ஏற்பாட்டில் மேலூர் ஊராட்சியில் செல்வமணி, நீல்சன் ஆகியோர் ஏற்பாட்டில் , 29.11.2024 நாவலூர் ஊராட்சியில் ரவிச்சந்திரன், சங்கர் பாபு ஆகியோர் ஏற்பாட்டில், வன்னியம்பாக்கம் ஊராட்சியில் ஏ.எம்.ஆர்.முரளி. ஏற்பாட்டில் சிறுவாக்கம் ஊராட்சியில் ஏ.பாளையம், ஓம் பிரகாஷ். ஏற்பாட்டில் 30.11.2024 நந்தியம்பாக்கம் ஊராட்சியில் கலைமணி, ராஜா, கலாவதி ஜோதி, கார்த்திக் ஆகியோர் ஏற்பாட்டில் காட்டுப்பள்ளி ஊராட்சியில் சேதுராமன் டில்லிபாபு, ஏ.ராஜி, ஏற்பாட்டில் வல்லூர் ஊராட்சியில் பா.து. தமிழரசன், ஆர்.ராமமூர்த்தி, ரவிச்சந்திரன் ஆகியோர் ஏற்பாட்டில் நடைபெறுகிறது என தெரிவித்தார்.

மேலும் இந்நிகழ்ச்சிகளில் மாவட்டக் கழகச் செயலாளர் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜே. கோவிந்தராஜன் தலைமை தாங்கி நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு பள்ளி மாணவ-மாணவியர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.

எனவே நடைபெறும் நிகழ்ச்சியில் மாநில, மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொள்கிறார்கள். நிகழ்ச்சிகளை சீறும் சிறப்போடு செய்துவிட வேண்டும் என்று கூட்டத்தில் தெரிவித்தனர்.

இதில் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

நடைபெறவிருக்கும் 2026 சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு இந்து சமய அறநிலைத்துறை அமைச்சரும் மாவட்டச் செயலாளருமான பி.கே.சேகர்பாபு ஆலோசனையின்படி இரண்டாம் கட்ட முகாமில் சிறப்பான முறையில் திரு.வி.க.நகர் தெற்கு பகுதி 75வது வட்ட BLA 2 பாக முகவர்கள் தேர்தல் வாக்குச்சாவடிகளில் விடுபட்ட வாக்காளர்கள், புதிய வாக்காளர்கள், முகவரி மாற்றம் செய்யும் பணியில் ஈடுபட்டனர் திரு.வி.க. நகர் சட்டமன்ற உறுப்பினர் ப. தாயகம் கவி, தொகுதி மேலிடப் பார்வையாளர் என்.கிருஷ்ணமூர்த்தி, பகுதி கழக செயலாளர் எம்.சாமிகண்ணு ஆகியோர் பார்வையிட்டனர் இதில் 7வ- வட்டகழக செயலாளர் வீ. கா. வெங்கடேசன், 75வது வட்ட திமுக மற்றும் நிர்வாகிகள் பாக முகவர்கள் கலந்து கொண்டனர்.

எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. பங்கேற்பு!

பெருங்களத்தூர் வடக்குப் பகுதியில் நலஉதவிகள் வழங்கல்!

பகுதிச் செயலாளர் டி.காமராஜ் அறிக்கை!

சென்னை, நவ.26-

பகுத்தறிவு பாதையில் பயணிக்கும் கழக இளைஞரணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு தாம்பரம் மாநகரம் பெருங்களத்தூர் வடக்கு பகுதி திமுக கழகம் மற்றும் இளைஞர் அணி சார்பில் காலை 8.00 மணி அளவில் பகுதி கழகத்திற்கு உட்பட்ட ஏழு வட்டங்களிலும் புதிய கொடிக்கம்பங்கள் அமைத்து கழகக் கொடி ஏற்றி காலை சிற்றுண்டி பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி அதன் பின் பகுதி கழகத்தின் சார்பில் காலை 10.00 மணி அளவில் தாம்பரம் ஜிஎஸ்டி சாலை அண்ணா பேருந்து நிலையம் அருகில் பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்படும். பகல் 12 மணி அளவில் லோகநாதன் தெரு, மேற்கு தாம்பரத்தில் உள்ள ஆதரவற்ற குழந்தைகள் இல்லத்தில் (குட் லைப் சென்டர்) மதிய உணவு வழங்கியும் கொண்டாடி மகிழ்ந்திடுவோம்.

மேலும் இந்நிகழ்ச்சியில் மேயர் பகுதிக்கு உட்பட்ட மாவட்டம் மாநகர, பகுதி வட்ட செயலாளர், நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி மற்றும் கழகத் தோழர்கள், பொதுமக்கள் என ஏராளமான கலந்து கொண்டு சிறப்பித்திடுமாறு பகுதி கழக செயலாளர் டி.காமராஜ் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கழக இளைஞரணிச் செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாள் எதிர்வரும் நவம்பர் 27 அன்று வருவதை முன்னிட்டு, எழும்பூர் தொகுதியில் நான்காவது நிகழ்வாக, 23.11.2024 அன்று வார்டு எண்.77 'அ', புளியந்தோப்பு, சிவராவ் சாலையில் நடந்த நிகழ்ச்சியில் 500 பள்ளி மாணவர்களுக்குப் புத்தகப் பை, விளையாட்டு மேற்சட்டை (ஜெர்சி) ஆகிய நலத்திட்ட உதவிகளைக் கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் வழங்கினார்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள்!

சோழவரம் வடக்கு ஒன்றியத்தில் கழகக் கொடியேற்றி உணவு வழங்கல்!

ஒன்றியச் செயலாளர் வழுதிகை நா.செல்வசேகரன் அறிவிப்பு!

சென்னை, நவ.26-

தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளர் டி.ஜே. கோவிந்தராஜன் தலைமையில் சிறுபான்மை நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் வாழ்த்துரையில் சோழவரம் வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் தொடர் நிகழ்ச்சிகள் நடைபெறுகிறது.

இது குறித்து சோழவரம் வடக்கு ஒன்றிய செயலாளர் வழுதிகை நா.செல்வசேகரன் அறிக்கை வருமாறு:-

அருமந்தை கூட்டுச்சாலையில் கழகக் கொடியேற்றி இனிப்பு வழங்கி 500 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்குதல்.

தச்சூர் கூட்டுச்சாலையில் கழக கொடி ஏற்றி இனிப்பு வழங்கி 500 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்குதல் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்.

வழுதிகைமேடு ஊராட்சியில் கழகக் கொடியேற்றி இனிப்பு வழங்கி 500 நபர்களுக்கு உணவு வழங்குதல்.

சின்னம்பேடு ஊராட்சியில் பள்ளி மாணவர்களுக்கு கையேடு மற்றும் கல்வி உபகரணங்கள் வழங்குதல்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் இல்லம் தோறும் இளைஞர் அணி உறுப்பினர் சேர்த்தல் முகாம் மாவட்ட துணை அமைப்பாளர் சீனிவாசன் ஏற்பாட்டில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.டி. மதன்குமார் மற்றும் துணை அமைப்பாளர்கள் கேபிள்.த.கணேசன்,டி.ஜி.ஆர். மணிவண்ணன்,அஜி.கே.இனியன் ஆகியோர் முன்னிலையில் மாதவரம் பஜாரில் நடைபெற்றது. இந்த முகாமில் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் சுதர்சனம் எம்எல்ஏ கலந்துகொண்டு இல்லம் தோறும் இளைஞர் அணி உறுப்பினர் சேர்த்தல் முகாமை துவக்கி வைத்து தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாநில அரசின் சாதனைகளையும் திராவிட முன்னேற்ற கழகத்தின் கொள்கைகளை எடுத்துரைத்தார். இதில் பகுதி செயலாளர்கள் துக்காராமன் , திமு தனியரசு , மண்டல குழு தலைவர் நந்தகோபால் உள்பட ஏராளமான இளைஞர்கள் கலந்து கொண்டனர்

எஸ்.முரளி - ராஜேஷ் ஜெயின் எம்.சி - பா.அண்ணாதுரை பங்கேற்பு!

துறைமுகம் 57 (அ) வட்டத்தில் வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு முகாம்!

தொகுதி பார்வையாளர் இரா.நரேந்திரன் ஆய்வு!

சென்னை, நவ. 26

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி, கழக இளைஞர் அணிச் செயலாளர், தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிக்காட்டுதல் படி, சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஏற்பாட்டில் துறைமுகம் மேற்கு பகுதி 57 (அ) வட்டத்தில் நான்கு தினங்கள் நடைபெற்ற சிறப்பு முகாமில் வட்டக் கழகச் செயலாளர் பா.அண்ணாதுரை தலைமையில் பாகம் 120 முதல் 133 வரையுள்ள அனைத்து பாகங்களிலும் புதிய வாக்காளர்கள் சேர்ப்பு முகாம் நடைபெற்றது. துறைமுகம் தொகுதி பார்வையாளர் இரா.நரேந்திரன், பகுதிச் செயலாளர் எஸ். முரளி, மாமன்ற உறுப்பினர் எஸ்.ராஜேஷ் ஜெயின் ஆகியோர் ஆய்வு செய்தனர்.

முகாமில் பொதுக்குழு உறுப்பினர் ஆர்.கலைச்செல்வி, தொழிலாளர் அணி மாவட்ட அமைப்பாளர் எல்.சம்பத்குமார், பகுதி துணைச் செயலாளர் கே.ஆர்.அபரஞ்சி, மாவட்டப் பிரதிநிதி டி.எஸ்.சேகர், வட்ட அவைத் தலைவர் கே.ஜி.துளசிராமன், வட்ட துணை செயலாளர்கள் டி. வேலு, கே.பவானி, பொருளாளர் ஆவின் சந்திரசேகர், பகுதி பிரதிநிதிகள் பா.முத்துக்குமார், தேவகானம்ராஜா, கேபிள் சங்கர், பிண்டு ஜெயின், ரூபாராம், தொண்டரணி மாவட்ட துணை அமைப்பாளர் டி. சேகர், விவசாய தொழிலாளரணி மாவட்ட துணை அமைப்பாளர் ஆர்.வேலாயுதம, நெசவாளர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் பா.நடராஜ், பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் நா.மோகன், வட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எஸ்.ராஜு, ஆதி திராவிடர் அணி பகுதி துணை அமைப்பாளர் பூக்கடை ராஜா, மகளிர் தொண்டரணி பகுதி துணை அமைப்பாளர்கள் எம்.ஆனந்தி, ரீட்டா, வட்ட தகவல் ஒருங்கிணைப்பாளர் டி.சண்முகம், வட்டக் கழக மூத்த முன்னோடி சு.அண்ணாதாசன், பாக முகவர்கள் ஜி.கே.செல்வம், எஸ்.ராஜு, அபிநவ், இ.லோகு, நாகலட்சுமி, ராம்குமார், வருண்குமார், சாய்பவன், சுரேஷ், ராமசந்திரா, அருண்குமார், பன்னீர்செல்வம் மற்றும் எஸ்.கே.பாரூக் சுல்தான், சுதர்சன், அம்முலு, கருப்பையா, சுமன், அருண், ரிஷி, லிங்கேஷ், கிஷோர், டி.டி.நரசிம்மா, பிரஸ் ராஜா, எல்.தயாநிதி, பரத்,பாலாஜி, சிவா, ரதிதேவி, தாரா, வைத்திஸ்வரி, நிர்மலா, சி. ரேணுகா, சாந்தி, இராஜேஸ்வரி, யாதகிரி ஆகியோர் களப்பணியாற்றினர்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர், உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் எளியோர் எழுச்சி நாளை முன்னிட்டு திமுக தலைமை நிலைய செயலாளரும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவருமான பூச்சி. எஸ். முருகன் நேற்று (25.11.2024) அக்ஷயா டிரஸ்ட் மூத்தோர் இல்லத்தின் அனைத்து கிளைகளின் முதியோருக்கும் ஒரு முழு நாளுக்கான உணவு வழங்கி சிறப்பித்தார். அக்ஷயா டிரஸ்ட் நிர்வாகி தாசரதி உடன் இருந்தார்.

சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, அறிவுறுத்தலின்படி ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி 40வது வட்டத்தின் சார்பாக புதிய வாக்காளர் நீக்கம் இடமாற்றம் சேர்க்கும் முகாம் வட்டசெயலாளர் நா.கோதண்டன் தலைமையில் நடைபெற்றது.பகுதி செயலாளர் இரா.லட்சுமணன் முன்னிலை வகித்தார்.ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, தொகுதி தேர்தல் பொறுப்பாளர் ஆர்.வி.லோகேஷ், ஆகியோர் ஆய்வு செய்தனர்.உடன் என்.மருதுகணேஷ், இர.பொன்இளவரசன், என்.அனிபா, ஆர்.டி.ராஜா, கே.பாலு, எம்.வேதலட்சுமி, கே.பி.சதிஷ்குமார், இராா.சீமான், எம்.எஸ்.ரவி, மு.சா.அரித்குமார், கே.கலா, க.ஹேமந்த்குமார், டி.விஜயகுமார், ஆர்.வெங்கட், ஆர்.பத்மநாபன், எஸ். எம்.முருகன், என்.டேனியல், மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

மாவட்ட செயலாளர். அமைச்சர். மா.சுப்பிரமணியன் அறிவுறுத்தலின் பேரில் தொகுதி மேலிடப் பார்வையாளர் .பரிதி இளம் சுருதி, பகுதி செயலாளர். எம்.கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட அவைத்தலைவர். சைதை. எஸ்.குணசேகரன், மற்றும் களக்காடி.எல்லப்பன், வி.பி.ஜானகிராமன், ஆர்.ரமேஷ், வீ.மதிவாணன், வெ.புருசோத்தமன் ஆகியோர் சைதை மேற்குப் பகுதி 139 அ வட்டத்திற்குட்பட்ட வாக்காளர் பட்டியலில் புதிய வாக்காளர் சேர்த்தல், நீக்கல் முகாம்களில் ஆய்வு செய்தனர். வாக்காளர் சரிபார்க்கும் பணியில் நவம்பர் 16, 17, 23 , 24. ஆகிய நான்கு நாட்கள் காலை 10 மணி முதல் மாலை 5 வரை. வட்டச் செயலாளர். சை.மு.சேகர் தலைமையில் டி.என். சிவமணி, இ.வரதன், பி.எஸ்.பிரகாஷ்,சுமதி தீனதயாளன், பூபதி.வெங்கடேசன் முன்னிலையில் நடைபெற்றது.